Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No. 19 of 2023**

Deposition of P.W.16 (L.W.24 ) } Prosecution } Defence }

Name of the Witness : திரு.பசுபதி

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 05.01.2026.

எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தபட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது இண்டூர் காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த பெரும்பாலை காவல் நிலையத்தில்

2020 முதல் 2023 வரை காவலராக பணிபுரிந்து வந்தேன். பணிபுரிந்த காலத்தில் 2022ம் ஆண்டு பெரும்பாலை காவல் நிலைய குற்ற எண் 72/ 2022 சட்டபிரிவு 341, 302 இதச வழக்கில் சம்பந்தப்பட்ட TN 73 D 2777என்ற வாகனத்தின் வகை மற்றும் உரிமையாளரை கண்டறிய எனக்கு பாப்பாரப்பட்டி காவல் ஆய்வாளர் பொறுப்பு ஏரியூர் காவல் வட்டம் காவல் ஆய்வாளர் அவர்கள் 13.07.2022ம் தேதி 18.00மணிக்கு ராணிபேட்டை போக்குவரத்து மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் சென்று உத்திரவு பெற்று வரும் படி எனக்கு வேண்டுகோள் கடிதத்துடன் பிணிகடவு சீட்டு வழங்கப்பட்டது. அதன் பேரில் 14.07.2022ம் தேதி காலை சுமார் 10.00மணியளவில் ராணிபேட்டை போக்குவரத்து மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களை சந்தித்து வேண்டுகோள் கடிதத்தை பெற்று மேற்படி வாகனமானது பஜாஜ் டிஸ்கவர் வாகனம் என்றும் அதன் உரிமையாளர் வேலூர் மாவட்டம் அஜ்பட் முதல் தெருவை சேர்ந்த சேக்ரகுமான் அவரின் மகன் ஷான்பாசா என்பவர் வாகனம் என்று அறிக்கை கொடுத்தார். நான் அதை பாப்பாரப்பட்டி காவல் ஆய்வாளர் பொறுப்பு ஏரியூர் காவல் வட்டம் காவல் ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

பொதுவாக குற்றம் செய்யும் நபர்கள் போலியான நம்பர் பிளேட் கொண்ட வாகனத்திலும் வரலாம் என்றால் வரலாம்.

Tmt.U.Monica, M.L.,
Additional District Judge,
Dharmapuri.